Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 220 | உள்ளூர் - 08.08.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 220 | வெளியூர் - 09.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

திருமண பொருத்தம்: முழுமையான வழிகாட்டி!

அமராவதி சைனிக் பள்ளியில் வேலை வாய்ப்பு...!

விஜய் கூட்டம்– திமுக / அதிமுக புறக்கணிப்பு!

59 ஆக உயரும் தமிழக மக்களவை தொகுதிகள்!

## மோடியின் வெளிநாட்டு பயணம்... செலவிட்ட ₹1-க்கு ₹66,000 முதலீடு!




புதுடெல்லி, ஆக. 08–

பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டு பயணங்களுக்காக 2021 முதல் 2025 வரை ரூ.482.92 கோடிசெலவிடப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அதே காலகட்டத்தில் இந்தியா 381.8 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.31.69 லட்சம் கோடி) அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்த்துள்ளது.

இதன்படி, அரசு செலவிட்ட ஒவ்வொரு ரூபாய்க்கும் சுமார் ரூ.66,000 மதிப்பிலான முதலீடு கிடைத்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த முதலீடுகள் அனைத்தும் பிரதமரின் வெளிநாட்டு பயணங்களால் மட்டுமே வந்தவை என்று அரசு அதிகாரப்பூர்வமாக கூறவில்லை.

2021 முதல் 2025 வரை 38 வெளிநாட்டு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், 316 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இவை தொழில்நுட்பம், வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, சுகாதாரம், வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கியவை.

## திருவண்ணாமலைக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வருகை!



திருவண்ணாமலை, ஆக. 08–

திருவண்ணாமலைக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று வருகை தர உள்ளதையொட்டி முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று மாலை சென்னை வருகிறார். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் திருவண்ணாமலை வருகிறார். திருவண்ணாமலை –செங்கம் சாலையில் கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் அமைந்துள்ள இறங்கு தளத்தில் ஹெலிகாப்டரில் வரும் அவர், மாலை 4.30 மணிக்கு ரமண மகரிஷி ஆசிரமத்துக்குச் செல்கிறார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு அண்ணாமலையார் கோயிலுக்குச் செல்கிறார். அங்கு தரிசனம் முடிந்த பின் புதுச்சேரிக்கு சாலை மார்க்கமாகச்செல்கிறார். அங்கு புதுச்சேரி காவல் துறைக்கு விருதுகளை வழங்கி பேசுகிறார்.

அமித் ஷா வருகையையொட்டி, ஹெலிகாப்டர் தரை இறங்கும் தளத்தில் மத்திய உள்துறை பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆய்வு செய்தனர். ஹெலிகாப்டரை தரை இறக்கி சோதனை செய்தனர்.

மேலும் அண்ணாமலையார் கோயிலிலும் ஆய்வு மேற்கொ ண்டனர். திருவண்ணாமலையில் ட்ரோன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டு ள்ளது.

## இந்தியாவுக்கு 100% வரி? அமெரிக்கா!




புதுடெல்லி, ஆக. 08–

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா, சீனா உள்ளிட்ட 5 நாடுகளின் பொருட்களுக்கு 100% வரை இறக்குமதி வரி விதிக்க வழிவகுக்கும் மசோதாவை அமெரிக்க செனட் 86–11 என்ற வாக்கு களில் நிறைவேற்றியுள்ளது.

உக்ரைன் போருக்கு ரஷ்யாவுக்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் ஒப்புதலும், அதிபரின் கையெழுத்தும் தேவை. இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் ரஷ்ய எண்ணெயை வாங்குவதா அல்லது அமெரிக்க சந்தையில் வர்த்தகம் செய்வதா என்ற நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

## ரூ.80,000 கோடி வேட்டை! அரசு பங்குகள் அதிரடி விற்பனை!




புதுடெல்லி, ஆக. 08–

மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்வது மற்றும் அரசு சொத்துகளை பணமாக்குவது மூலம் நடப்பு நிதியாண்டில் ரூ.80,000 கோடி திரட்ட தீவிரம் காட்டி வருகிறது. முதற்கட்டமாக எல்ஐசி பங்குகளை விற்பனை செய்து ரூ.31,550 கோடி திரட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கோல் இந்தியா, ஐஆர்எப்சி நிறுவனங்களில் தலா 2 சதவீத பங்குகள் விற்பனை மூலம் ரூ.21,000 கோடிக்கு மேல்கிடைத்துள்ளது. அடுத்ததாக நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட ஐடிபிஐ வங்கி பங்குகளை சுமார் 2.5 பில்லியன் டாலர் மதிப்பில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விற்பனை ஆண்டுக்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய கிழக்கு போர் காரணமாக கச்சா எண்ணெய், எரிவாயு, உரம் உள்ளிட்டவற்றின் விலை உயர்ந்துள்ள நிலையில், அரசு செலவினங்களை சமாளிக்க இந்த நிதி உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரூ.80,000 கோடி இலக்கை எட்ட மத்திய அரசு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## கோயில்களில் விஐபி தரிசனம்: நடைமுறைகள்!




சென்னை, ஆக. 08–

**1. விஐபி வருகை குறித்து முன்கூட்டியே தகவல்**

திரைத்துறை பிரபலங்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் விஐபி–க்கள் கோயிலுக்கு வருவதாக இருந்தால், குறைந்தது ஒரு நாளுக்கு முன்பாக கோயில் பெயர், வருகை நேரம், அவர்களுடன் வருபவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட முழு விவரங்களை அறநிலையத்துறை அமைச்சரின் அலுவலகத்துக்கு தெரிவிக்க வேண்டும்.

**2. செப்டம்பர் 1 முதல் மொபைல் போனுக்கு தடை**

அனைத்து முதுநிலைத் திருக்கோயில்களிலும் 01.09.2026 முதல் பக்தர்கள் மொபைல் போன்களை கோயிலுக்குள் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட வேண்டும். இதற்காக பாதுகாப்பான லாக்கர் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**3. புகைப்படம், வீடியோ, ரீல்ஸ் தடை**

கோயிலுக்குள் இறைவனின் திருவுருவங்களைப் புகைப்படம் எடுப்பது, வீடியோ, ரீல்ஸ் பதிவு செய்வது ஆகியவற்றுக்கு தடை. விஐபி, முக்கியஸ்தர்கள், திரைத்துறை பிரபலங்களுடன் ஊடகங்கள் புகைப்படம்/ வீடியோ எடுக்கவும் அனுமதிக்கக் கூடாது.

**4. விதிமீறினால் அதிகாரிகள் மீது நடவடிக்கை**

இந்த நடைமுறைகள் எந்தவித விதிவிலக்கும் இன்றி கடுமையாகப் பின்பற்றப்பட வேண்டும். விதிமீறல் தொடர்பாக செய்திகள் வெளியாகும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## மோடி டேபிளில் புதிய தலைவலி!

# இந்தியர்களுக்கு சீனா விசா ‘செக்’! பிசினஸ் விசா ஒப்புதல் சரிவு

## தொழில், வர்த்தகத்தில் கடும் பாதிப்பு; நிறுவனங்கள் கவலை!!




புதுடெல்லி, ஆக. 08–

இந்தியாவும், இந்திய தொழிற்துறையும் சீனாவின் உதிரிபாகங்கள், இயந்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத் திறனை கணிசமாக நம்பியுள்ள நிலையில், சீனாவின் புதிய விசா கட்டுப்பாடுகள் இந்திய நிறுவனங்களுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சீனா+1 கொள்கை காரணமாக உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் சீனாவில் இருந்து இந்தியாவுக்கு உற்பத்தி திட்டங்களை மாற்றி வருகின்றன. இதனால் இந்தியாவில் புதிய தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தி ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் சீன இயந்திரங்கள், உதிரிபாகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதால், சீன நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்களிப்பும் முக்கியமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியா வுக்கு செல்லும் சீன நிபுணர்களுக்கு ஏற்கெனவே சீன அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்திருந்ததாக கூறப்படுகிறது. தற்போது, இந்தியாவில் இருந்து சீனாவுக்கு செல்லும் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் நிறுவன அதிகாரிகளுக்கு பிசினஸ் விசா வழங்குவதிலும் கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளதாக இந்திய நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

முன்பு இந்தியாவில் இருந்து சீனாவுக்கு பிசினஸ் விசாவுக்கு விண்ணப்பித்தால் பெரும்பாலான விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் கிடைத்து வந்ததாக கூறப்படுகிறது. ஆனால், கடந்த சில மாதங்களாக விண்ணப்பங்களில் 20 முதல் 40 சதவீதம் மட்டுமே ஒப்புதல் பெறுவதாக எலக்ட்ரானிக்ஸ், ஆட்டோமொபைல் மற்றும் ஒப்பந்த உற்பத்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவில் இருந்து இயந்திரங்கள் மற்றும் மூலப்பொருட்களை வாங்குதல், வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல், உற்பத்தி நடவடிக்கைகள் குறித்து பயிற்சி பெறுதல், தொழிற்சாலை செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட பணிகளுக்காக இந்திய நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள் சீனாவுக்கு சென்று வந்தனர். தற்போது விசா கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கலால் இப்பணிகள் பாதிக்கப்படுவதாக நிறுவனங்கள் கூறுகின்றன.

இதனால் இந்தியாவில் தொழிற்சாலைகளை இயக்குவது, புதிய திட்டங்களை செயல்படுத்துவது மற்றும் சீன நிறுவனங்களுடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வது சவாலாக மாறியுள்ளது. இந்த பிரச்சினையை எதிர்கொள்ளும் பல முன்னணி நிறுவனங்கள் பிரதமர் மோடி அலுவலகத்துக்கு அதிகாரப்பூர்வமாக கடிதம் எழுதி, விசா கட்டுப்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளை விளக்கியுள்ளன. மேலும், சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் தீர்வு காண வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தியாவுக்கு சீனாவில் இருந்து தொடர்ந்து பொருட்களை இறக்குமதி செய்து வரும் வர்த்தகர்களும் இதேபோன்ற விசா சிக்கல்களை எதிர்கொள்வதாக சமூக வலைதளங்களில் தெரிவித்து வருகின்றனர்.

## சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 15 புதிய நீதிபதிகள்!



சென்னை, ஆக. 08–

சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 5 பேரை நிரந்தர நீதிபதிகளாகவும், 10 பேரை கூடுதல் நீதிபதிகளாகவும் நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவிட்டுள்ளார். 15 பேருக்கும் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி விரைவில் பதவிப் பிரமாணம் செய்து வைக்க உள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மொத்தம் 75 நீதிபதி பணியிடங்கள் உள்ளன. தற்போது தலைமை நீதிபதியுடன் 51 பேர் பணியில் உள்ள நிலையில், 24 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்த காலியிடங்களை நிரப்பும் வகையில் உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை செய்திருந்தது.

நிரந்தர நீதிபதிகள்: உயர் நீதிமன்ற மதுரை கிளை உதவி சொலிசிட்டர் ஜெனரலாக இருந்த கே. கோவிந்தராஜன், சென்னை உயர் நீதிமன்ற அமலாக்கத் துறை சிறப்பு வழக்கறிஞர்களாக இருந்த ரஜினீஷ் பதியால், என். ரமேஷ், மாநில அரசு வழக்கறிஞராக இருந்த ஜி. கே.முத்துக்குமார், மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரலாக இருந்த ஆர். ராஜேஷ் விவேகானந்தன் ஆகிய 5 பேரும் நிரந்தர நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கூடுதல் நீதிபதிகள்: புதுச்சேரி அரசு வழக்கறிஞராக இருந்த எஸ். ரவீக்குமார், உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் என்.திலீப்குமார், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் இ.மனோகரன், மாவட்ட முதன்மை நீதிபதிகளான பி.முருகன், எம்.டி.சுமதி, எஸ். கார்த்திகேயன், பி.முருகேசன், என். குணசேகரன், சி.திருமகள், டி.லிங்கேஸ்வரன், கே.பாலதண்டாயுதம், மேலும் சமீபத்தில் ஓய்வு பெற்ற தலைமைப் பதிவாளர் எஸ். அல்லிஆகியோரில் 10 பேர் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 08.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 23-ம் தேதி

# மக்களின் யோசனைகள் கேட்கும் தமிழக அரசு!



தமிழக அரசின் வளர்ச்சிக்கும், மக்கள் நலத் திட்டங்களின் தொடர்ச்சிக்கும் வலுவான வருவாய் அவசியம். இந்த நிலையில், மாநிலத்தின் வருவாயை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை பொதுமக்களிடமிருந்தே பெற தமிழக அரசு எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்க முயற்சியாகும்.

முதல்வர் விஜய் தலைமையிலான அரசு, முன்னாள் திட்டக்குழு துணைத் தலைவர் மான்டெக் சிங் அலுவாலியா தலைமையில் "வருவாய் பெருக்குதல் குழு" அமைத்துள்ளது. இந்தக் குழு, மாநிலத்தின் வரி மற்றும் வரியல்லா வருவாயை அதிகரிப்பது, புதிய வருவாய் ஆதாரங்களை கண்டறிவது, நிதி தன்னிறைவை மேம்படுத்துவது உள்ளிட்ட முக்கிய நோக்கங்களுடன் செயல்பட உள்ளது.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம், பொதுமக்கள், தொழில் அமைப்புகள், கல்வியாளர்கள், பொருளாதார நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் என அனைவரிடமிருந்தும் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை அரசு நேரடியாக வரவேற்றிருப்பதே ஆகும். அரசின் கொள்கை வடிவமைப்பில் மக்களின் பங்களிப்பை உறுதி செய்யும் இந்த அணுகுமுறை, ஜனநாயக நிர்வாகத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக பார்க்கப்படுகிறது.

ஆனால், யோசனைகளைப் பெறுவது மட்டுமே போதாது. மக்களிடம் இருந்து வரும் பரிந்துரைகளை வெளிப்படையாக ஆய்வு செய்து, நடைமுறைக்கு ஏற்றவற்றை விரைவாக செயல்படுத்தும் மனப்பான்மை அரசிடம் இருக்க வேண்டும். வருவாயை அதிகரிக்கும் முயற்சிகள் மக்களின் சுமையை உயர்த்தும் வகையில் அல்லாமல், தொழில் முதலீடு, சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், ஏற்றுமதி, சிறு மற்றும் குறு தொழில்கள், அரசுச் சொத்துகளின் திறமையான பயன்பாடு போன்ற நீடித்த வளர்ச்சி வழிகளை நோக்கி அமைய வேண்டும்.


வரி வசூலை மேம்படுத்துவதோடு, வரி ஏய்ப்பை கட்டுப்படுத்துதல், அரசின் செலவினங்களில் சிக்கனத்தை கடைபிடித்தல், டிஜிட்டல் நிர்வாகத்தை விரிவுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகளும் வருவாய் உயர்வுக்கு முக்கிய பங்காற்றும். மேலும், முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்கினால் வேலைவாய்ப்பும், தொழில் வளர்ச்சியும் அதிகரித்து, அதன் மூலம் அரசின் வருவாயும் இயல்பாக உயரும்.

மக்களின் கருத்துகளை மதித்து, நிபுணர்களின் ஆலோசனைகளை இணைத்து, நீண்டகால பொருளாதார வளர்ச்சியை நோக்கி அரசு செயல்பட்டால், தமிழகத்தின் நிதி நிலை மேலும் வலுப்பெறும். மக்களின் பங்களிப்புடன் உருவாகும் கொள்கைகளே நிலையான வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

# 59 ஆக உயரும் தமிழக மக்களவை தொகுதிகள்!

சென்னை, ஆக. 08–

தொகுதி மறுவரையறை நடந்தால் தமிழக மக்களவை தொகுதிகள் 39–ல் இருந்து 59 ஆக உயர வாய்ப்பு உள்ளது. அவ்வாறு உயர்ந்தால், 59 தொகுதிகளின் உத்தேச பட்டியல் வெளியாகியுள்ளது. நடைபெற்று வரும் நாடாளுமன்றம் மழைக்கால கூட்டத் தொடரில், திருத்தப்பட்ட தொகுதி மறுவரையறை சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.




மக்கள்தொகை அடிப்படையில் நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகளின் எல்லைகள் வரையறுக்கப்பட இருப்பதால், மக்கள் தொகையை கட்டுப்படுத்திய மாநிலங்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன

தொகுதி மறுவரையறை சட்ட மசோதா நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறினால், நாடு முழுவதும் தற்போதுள்ள 543 தொகுதிகள் 850 ஆக உயரும். குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகள், 59 ஆக உயர வாய்ப்பு உள்ளது.

ஆனால், மக்கள்தொகையை கட்டுப்படுத்தாத மாநிலங்களுக்கு இதைவிட அதிக தொகுதிகள் கிடைக்கும் என்பதால், தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், தொகுதி மறுவரையறை குறித்து விவாதிக்க தமிழக எம்.பி.க்கள் ஆலோசனை கூட்டத்தை முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் சென்னை கலைவாணர் அரங்கத்தில் கூட்டியுள்ளார்.

ஆனால், இந்த கூட்டத்தை தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. என்றாலும், நாடாளுமன்ற இரு அவைகளில் தொகுதி மறுவரையறை சட்ட மசோதா நிறைவேறினால், தமிழ்நாட்டில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகள் 59 ஆக உயரும். அவ்வாறு உயர்ந்தால், என்னென்ன பெயர்களில் மக்களவை தொகுதிகள் இருக்கும் என்ற உத்தேச பட்டியல் வெளியாகியுள்ளது.


அதன் விவரம் வருமாறு:–

1) திருத்தணி
2) திருவள்ளூர்
3) சென்னை வடக்கு
4) சென்னை கிழக்கு
5) சென்னை மத்திய
6) சென்னை தெற்கு
7) சென்னை மேற்கு
8) தாம்பரம்
9) செங்கல்பட்டு
10) காஞ்சிபுரம்
11) வேலூர்
12) திருப்பத்தூர்
13) ராணிப்பேட்டை
14) திருவண்ணாமலை
15) வந்தவாசி / ஆரணி
16) திண்டிவனம்
17) விழுப்புரம்
18) கள்ளக்குறிச்சி
19) கடலூர்
20) சிதம்பரம்
21) ஒசூர்
22) கிருஷ்ணகிரி
23) தர்மபுரி
24) சேலம்
25) மேட்டூர்
26) ராசிபுரம்
27) நாமக்கல்
28) ஈரோடு
29) கோபிசெட்டிபாளையம்
30) திருப்பூர்
31) தாராபுரம் (அல்லது) பழனி
32) பொள்ளாச்சி
33) கோவை கிழக்கு
34) கோவை மேற்கு
35) நீலகிரி
36) கரூர்
37) பெரம்பலூர்
38) அரியலூர் (அல்லது) லால்குடி
39) திருச்சிராப்பள்ளி
40) தஞ்சாவூர்
41) கும்பகோணம்
42) மயிலாடுதுறை
43) நாகபட்டினம்
44) திருவாரூர்
45) புதுக்கோட்டை
46) சிவகங்கை
47) ராமநாதபுரம்
48) தூத்துக்குடி
49) திருச்செந்தூர்
50) திருநெல்வேலி
51) நாங்குநேரி (அல்லது) கன்னியாகுமரி
52) கன்னியாகுமரி (அல்லது) நாகர்கோவில்
53) தென்காசி
54) சிவகாசி
55) விருதுநகர்
56) தேனி
57) மதுரை கிழக்கு
58) மதுரை மேற்கு
59) திண்டுக்கல்

# யு.பி.ஐ. பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படுமா?

புதுடெல்லி, ஆக. 08–

யு.பி.ஐ. (UPI) பரிவர்த்தனைகளில் வணிகர்களுக்கான கட்டணங்களின் எதிர்காலம் குறித்த விவாதங்கள் அதிகரித்து வரும் நிலையில், நுகர்வோர் தொடர்ந்து யு.பி.ஐ. சேவையை இலவசமாக பயன்படுத்தலாம் என்றும், இந்த தளம் மூலம் பணம் பெறுவதற்கு சிறு வணிகர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படாது என்றும் இந்திய பேமன்ட் கார்ப்பரேஷன் (PCI) தெளிவுபடுத்தியுள்ளது.




யு.பி.ஐ. கட்டணங்கள் குறித்து இந்திய பேமன்ட் கார்ப்பரேஷன் விளக்கம் அளித்துள்ளது. இது குறித்த எக்ஸ் தள பதவில், 2016–இல் தொடங்கப்பட்டதில் இருந்து யு.பி.ஐ. நுகர்வோருக்கு இலவசமாகவே இருந்து வருவதாகவும், இந்த தளத்தை பயன்படுத்தும் தனிநபர்களிடம் பரிவர்த்தனை கட்டணம் வசூலிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை அணுகக்கூடியதாக மாற்றுவதற்காக யு.பி.ஐ. வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், இந்தியாவின் டிஜிட்டல் பரிவர்த்தனை சூழலமைப்பில் அது தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகிறது என்று இந்திய பேமன்ட் கார்ப்பரேஷன் மேலும் கூறியது.

"2016–ல் தொடங்கப்பட்டதில் இருந்து யு.பி.ஐ. நுகர்வோருக்கு எப்போதும் இலவசமாகவே இருந்து வருகிறது. ஒவ்வொரு இந்தியரும் எந்தவித பரிவர்த்தனை கட்டணமும் செலுத்தாமல் உடனடி டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை தொடர்ந்து மேற்கொள்ளலாம்," என்று அது கூறியது. நாட்டின் அதிவேகமாக விரிவடைந்து வரும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை உள்கட்டமைப்பை இயக்குவதன் நிலைத்தன்மை குறித்த விவாதங்கள் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில் இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த விவாதம் நுகர்வோரிடம் கட்டணம் வசூலிப்பது பற்றியது அல்ல, மாறாக ஒவ்வொரு மாதமும் பில்லியன் கணக்கான பரிவர்த்தனைகளை செயலாக்கும் ஒரு சூழல் அமைப்புக்கு நீண்டகால ஆதரவை உறுதி செய்வது பற்றியது என்று பி.சி.ஐ. கூறியது.

யு.பி.ஐ. பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு சிறு வணிகர்கள் கட்டணம் செலுத்த தேவையில்லை. அத்தகைய வணிகங்களை பாதுகாப்பது அந்த தளத்தின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி உத்தியின் மையமாக தொடர்கிறது.

# அசாம் வெள்ளம்: பலி 98; பாதிப்பு: 1.55

அசாம், ஆக. 08–

அசாமில் வெள்ள சூழல் மோசமாகவே நீடித்தது. அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, பலி எண்ணிக்கை 98–ஐ எட்டியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை 13–ஆகவும், பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை 1.55 லட்சமாகவும் குறைந்துள்ளது.



சாரைடியோ (Charaideo) மாவட்டத்தில் உள்ள மஹ்மோரா வருவாய் வட்டத்தில்தான் இந்த சமீபத்திய உயிரிழப்பு பதிவாகி இருப்பதாக அசாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (ASDMA) அறிக்கை தெரிவிக்கிறது.

சிவசாகர், கோலாகாட், நாகான், ஹோஜாய், சோனித்பூர், தேமாஜி, தர்ராங், பிஸ்வநாத், காம்ரூப் (மெட்ரோ), லக்கிம்பூர், உதல்குரி, ஜோர்ஹாட் மற்றும் சாரைடியோ ஆகிய 13 மாவட்டங்கள் வெள்ளத்தால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளன; இதனால் 33 வருவாய் வட்டங்களும் 464 கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் மொத்தம் 1,55,849 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் கோலாகாட் மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து சிவசாகர் மற்றும் ஜோர்ஹாட் மாவட்டங்கள் உள்ளன. கடந்த வியாழக்கிழமையன்று 15 மாவட்டங்களும், 1.68 லட்சத்துக்கும் அதிகமான மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர். நிர்வாகம் 55 நிவாரண முகாம்களை நடத்தி வருகிறது; இவற்றில் இடம்பெயர்ந்த 10,000–க்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் 18 நிவாரண பொருட்கள் விநியோக மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

கோலாகாட் மாவட்டத்தில் உள்ள கோலாகாட் நகரம் மற்றும் நுமாலிகர் ஆகிய இடங்களில் தன்சிரி ஆறும், ஸ்ரீபூமி மாவட்டத்தில் குஷியாரா ஆறும் அபாய அளவைத் தாண்டி ஓடுகின்றன.

10,748.64 ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன; அதேவேளையில் 47,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சாலைகள், பாலங்கள் மற்றும் வீடுகள் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்புகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

# மோசமான வானிலையால் காஷ்மீரில் அமர்நாத் புனித யாத்திரை தற்காலிகமாக நிறுத்தம்!



ஸ்ரீநகர்: மோசமான வானிலையால் காஷ்மீரில் அமர்நாத் புனித யாத்திரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது

# தாம்பரம்- திருவனந்தபுரம் இடையே சிறப்பு ரெயில்: தெற்கு ரெயில்வே அறிவிப்பு!




தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

ஓணம் பண்டிகையை முன்னிட்டு வருகிற 12–ந்தேதி முதல் அடுத்த மாதம் 6–ந்தேதி வரை தெற்கு ரெயில்வே சார்பில் 56 சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகிறது. அதன்படி, சென்னை சென்ட்ரலில் இருந்து வருகிற 19–ந்தேதி முதல் அடுத்த மாதம் 2–ந்தேதி வரை (புதன்கிழமை மட்டும்) கேரளம் மாநிலம் கொல்லத்திற்கு சிறப்பு ரெயில் (வண்டி எண்–06119) இயக்கப்படுகிறது. அதே போல, கொல்லத்தில் இருந்து வருகிற 20–ந்தேதி முதல் அடுத்த மாதம் 3–ந்தேதி வரை (வியாழக்கிழமை மட்டும்) சென்னை சென்ட்ரலுக்கு சிறப்பு ரெயில் (06120) இயக்கப்படுகிறது.


திருவனந்தபுரம் சென்ட்ரலில் இருந்து வருகிற 19–ந்தேதி முதல் அடுத்த மாதம் 2–ந்தேதி வரை (புதன்கிழமை மட்டும்) தாம்பரத்திற்கு சிறப்பு ரெயில் (06110) இயக்கப்படுகிறது.

அதே போல, தாம்பரத்தில் இருந்து வருகிற 20–ந்தேதி முதல் அடுத்த மாதம் 3–ந்தேதி வரை (வியாழக்கிழமை மட்டும்) திருவனந்தபுரம் சென்ட்ரலுக்கு சிறப்பு ரெயில் (06109) இயக்கப்படுகிறது.

மங்களூரு சென்ட்ரலில் இருந்து வருகிற 17–ந்தேதி முதல் 31–ந்தேதி வரை (திங்கட்கிழமை மட்டும்) சென்னை எழும்பூருக்கு சிறப்பு ரெயில் (06126) இயக்கப்படுகிறது.

அதே போல, சென்னை எழும்பூரில் இருந்து வருகிற 18–ந்தேதி முதல் அடுத்த மாதம் 1–ந்தேதி வரை (செவ்வாய்க்கிழமை மட்டும்) மங்களூரு சென்ட்ரலுக்கு சிறப்பு ரெயில் (06125) இயக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# திருமண பொருத்தம்: முழுமையான வழிகாட்டி!

| | | | |
|---|---|---|---|
| 12 விரய மோட்ச ஸ்தானம் | 1 லக்கின, சுய ஸ்தானம் | 2 குடும்ப, தன ஸ்தானம் | 3 இளைய சகோதர, தைரிய ஸ்தானம் |
| 11 மூத்த சகோதர, லாப ஸ்தானம் | ஒவ்வொரு ஸ்தானம் / வீடும் நம் வாழ்வில் உள்ள பல்வேறு அம்சங்களை கூறுகிறது. | | 4 சுக, தாயார் ஸ்தானம் |
| 10 கர்ம, தொழில் ஸ்தானம் | தமிழ் சமயம் | | 5 பூர்வ புண்ணிய ஸ்தானம் |
| 9 பாக்கிய, தந்தை ஸ்தானம் | 8 ஆயுள், துஸ் ஸ்தானம் | 7 மனைவி, தொழில், கூட்டாளி ஸ்தானம் | 6 நோய், எதிரிகள் ஸ்தானம் |

திருமணத்திற்கு முன் மணமகன், மணமகளின் ஜாதகங்களை முழுமையாக ஆய்வு செய்வது மிகவும் அவசியம். 10 பொருத்தங்கள் மட்டும் அல்லாமல், கிரக நிலைகள், பாவங்கள், தசா–புத்தி, மாங்கல்ய பலம், ராகு–கேது தோஷம்உள்ளிட்ட அம்சங்களையும் ஆராய்ந்தே திருமண முடிவு எடுக்க வேண்டும்.

**ஜாதகக் கட்டம்**

ஜாதகத்தில் உள்ள கிரக அமைப்பு, பாவங்கள், தசா–புத்தி ஆகியவை திருமண வாழ்க்கையின் நிலைத்தன்மை, மகிழ்ச்சி மற்றும் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக கருதப்படுகின்றன.

**திருமணத்திற்கான 10 பொருத்தங்கள்**

தினப் பொருத்தம் ஆரோக்கியம், நலன்.
கணப் பொருத்தம் மனநிலை, குடும்ப அமைதி.
மகேந்திரப் பொருத்தம் சந்ததி பாக்கியம், வளம்.
ஸ்திரப் பொருத்தம் நீண்ட ஆயுள், செழிப்பு.
யோனிப் பொருத்தம் உடல், மன ஒற்றுமை.
ராசிப் பொருத்தம் தம்பதியர் இணக்கம்.
ராசி அதிபதி பொருத்தம் அதிர்ஷ்டம், முன்னேற்றம்.
வசியப் பொருத்தம் பரஸ்பர ஈர்ப்பு.
ரஜ்ஜுப் பொருத்தம் மாங்கல்ய பலம், திருமண நிலைத்தன்மை.
வேதைப் பொருத்தம் சுப பலன்கள்.

**ராசி நட்சத்திர பொருத்தம்**

ராசி மற்றும் நட்சத்திர பொருத்தம் தம்பதியரின் குணநலன், மனஒற்றுமை, குடும்ப மகிழ்ச்சி, ஆரோக்கியம்ஆகியவற்றை மதிப்பிட உதவுகிறது.

**கிரக அமைப்பின் தாக்கம்**

சனி, செவ்வாய், ராகு, கேது போன்ற கிரகங்கள் பாதக நிலையில் இருந்தால் திருமண வாழ்க்கையில் சவால்கள் உருவாகலாம். அதேசமயம் குரு, சுக்கிரன் போன்ற சுப கிரகங்கள் நல்ல நிலையில் இருந்தால் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

**மாங்கல்ய பலம்**

மாங்கல்ய பலம் தம்பதியரின் நீண்ட ஆயுள், திருமண நிலைத்தன்மை, குடும்ப மகிழ்ச்சி ஆகியவற்றைக் குறிக்கிறது. பெண்களின் ஜாதகத்தில் சந்திரன், குரு, சுக்கிரன் வலிமையாக இருந்தால் மாங்கல்ய பலம் சிறப்பாக இருக்கும். குறைபாடு இருந்தால் பரிகாரம் செய்து திருமணம் செய்வது நல்லது.

**ராகு கேது தோஷம்**

ஜாதகத்தில் 1, 2, 5, 7, 8 ஆகிய இடங்களில் ராகு–கேது அமைந்தால் சர்ப்ப (ராகு–கேது) தோஷம் ஏற்படலாம். இதனால் திருமண தாமதம், மனக்குழப்பம், குடும்ப பிரச்சினைகள் உருவாக வாய்ப்பு உள்ளது. இதற்கு பொருத்தமான ஜாதக இணைப்பு மற்றும் பரிகாரம் அவசியம்.

**பரிகாரங்கள்**

ராகு காலத்தில் துர்க்கை அல்லது காளியம்மனுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றுதல்.

போர்வை அல்லது கடுகு எண்ணெய் தானம் செய்தல்.

ஸ்ரீ காளஹஸ்தி கோயிலில் ராகு–கேது பரிகார பூஜை செய்தல்.

**தசா புத்தி**

திருமண முடிவுக்கு முன் தசா, புத்தி, கர்ம பலன்கள் ஆகியவற்றை ஜோதிட நிபுணர் மூலம் ஆய்வு செய்வது திருமண வாழ்க்கை அமைதியாக அமைய உதவும்.

குறிப்பு: 10 பொருத்தங்கள் மட்டும் போதுமானதல்ல. முழு ஜாதக ஆய்வு, மாங்கல்ய பலம், கிரக அமைப்பு, தோஷங்கள் மற்றும் தசா–புத்தி ஆகிய அனைத்தையும் இணைத்து மதிப்பீடு செய்வதே சிறந்த திருமண பொருத்தமாக கருதப்படுகிறது.

# விஜய் கூட்டம்- திமுக / அதிமுக புறக்கணிப்பு!



சென்னை, ஆக. 08–

தொகுதி மறுவரையறை தொடர்பாக முதலமைச்சர் விஜய் தலைமையிலான எம்.பி.க்கள் கூட்டத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக எம்பிக்கள் பங்கேற்கின்றன. திமுக, அதிமுக புறக்கணிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது. இதையடுத்து திமுக, அதிமுக எம்.பி.க்கள் கூட்டத்தில் பங்கேற்குமாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் அழைப்பு விடுத்து இருந்தார்.

இந்நிலையில் தொகுதி மறுவரையறை தொடர்பாக முதலமைச்சர் விஜய் தலைமையிலான எம்.பி.க்கள் கூட்டத்தை அதிமுக புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது. அதிமுகவை சேர்ந்த எம்.பி.க்கள் இன்பதுரை, தம்பிதுரை, தனபால், தர்மர் ஆகிய 4 பேரும் பங்கேற்க மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தவெக அரசு நடத்தும் அரசியல் நாடகத்தில் திமுக பங்கேற்காது என்று கனிமொழி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை எம்.பி.யும், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமல்ஹாசன், தேமுதிகவை சேர்ந்த மாநிலங்களவை எம்.பி. சுதீஷும் பங்கேற்க மாட்டார்கள் என தகவல் வெளியாகி உள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# ஸ்டென்ட் போட்டாலும் மீண்டும் மாரடைப்பு வருமா?



இதயத்தில் ஏற்பட்ட அடைப்பை சரிசெய்ய ஸ்டென்ட் பொருத்தப்படுவது ரத்த ஓட்டத்தை சீராக்க உதவும். ஆனால், ஸ்டென்ட் போட்டால் இனி மாரடைப்பு வராது என்பது தவறான நம்பிக்கை என்று இதய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

காலப்போக்கில் மற்ற ரத்த நாள்களிலும் அடைப்பு ஏற்படுவதால் மீண்டும் மாரடைப்பு வர வாய்ப்பு உள்ளது. தற்போது பயன்படுத்தப்படும் மருந்து பூசப்பட்ட ஸ்டென்ட்கள் (Drug–Eluting Stents) மீண்டும் அடைப்பு மற்றும் ரத்த உறைவு அபாயத்தை குறைத்தாலும், அதை முற்றிலும் தடுக்க முடியாது.

ஸ்டென்ட் பொருத்தியவர்கள் மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துகளை, குறிப்பாக ரத்தத்தை நீர்த்துப்போகச் செய்யும் மருந்துகளை தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். புகைப்பிடித்தல், சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் ஆகியவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் அவசியம்.

மேலும், தினமும் 3045 நிமிடங்கள் நடைப்பயிற்சி, சத்தான உணவு, உடல் எடை கட்டுப்பாடு, வழக்கமான மருத்துவ பரிசோதனை ஆகியவற்றை பின்பற்ற வேண்டும்.

**உடனடியாக மருத்துவரை அணுக வேண்டிய அறிகுறிகள்:**

நெஞ்சுவலி

மூச்சுத்திணறல்

அதிக வியர்வை

இடது கை, தோள் அல்லது தாடைக்கு வலி பரவுதல்

மருத்துவர்களின் அறிவுரை:

ஸ்டென்ட் இதயத்திற்கு ரத்த ஓட்டத்தை சீராக்கும்; ஆனால் மீண்டும் மாரடைப்பு வராது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. மருந்துகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை தொடர்ந்து கடைப்பிடிப்பதே இதயத்தை பாதுகாக்கும் சிறந்த வழியாகும்.



தூத்துக்குடியில் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு மேயர் ஜெகன் பெரியசாமி கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.



தேனி மாவட்டம், உத்தமபாளையம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



மதுரை மணி நாளிதழ் சனி | ஆகஸ்ட் 08 2026



**மேலும் ஒருவரை கைது**

**மதுரை மீனாட்சி அம்மன் கோயில் நில மோசடி வழக்கில் மேலும் ஒருவரை கைது**

முறைகேடான பத்திரப்பதிவுக்கு உதவியதாக திண்டுக்கல் சிறுமலையைச் சேர்ந்த கலிகுமார் கைது; ரூ.60 கோடி நில மோசடி வழக்கில் இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

குற்றச்சாட்டு

- பத்திரப்பதிவு செயல்முறையில் உதவியதாக குற்றச்சாட்டு
- நில ஆவணங்களில் முறைகேடு நடத்தியதாக தகவல்
- திண்டுக்கல் சிறுமலை பகுதியைச் சேர்ந்த கலிகுமார் கைது

நில மோசடி விவரம்

மொத்த மோசடி தொகை ரூ.60 கோடி

இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் 4 பேர்

வழக்கு விசாரணை தொடருகிறது

கோயில் நிலங்களை பாதுகாக்க அரசு தீவிர நடவடிக்கை

# அமெரிக்க டேட்டா எதிரொலி.. தங்கம் விலை தடாலடி உயர்வு!

சென்னை, ஆக. 08–

அமெரிக்காவின் வேலைவாய்ப்பு தரவு எதிர்பார்த்ததைவிட மோசமாக வெளியானதால், வட்டி குறைப்பு எதிர்பார்ப்பு அதிகரித்து தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது.

சர்வதேச சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கம் 2.7% உயர்ந்து 4,371.89 டாலராக 7 மாத உச்சத்தை எட்டியது. வெள்ளி விலையும் 3.5% உயர்ந்து 65.14 டாலராக உள்ளது. ஒரே வாரத்தில் தங்கம் 7.43%, வெள்ளி 10.27% உயர்ந்து ள்ளன. அமெரிக்க பெடரல் ரிசர்வ் செப்டம்பர் கூட்டத்தில் வட்டி குறைக்க வாய்ப்பு இருப்பதாக எதிர்பார்க்கப்படு வதால், அடுத்த சில நாட்களிலும் தங்கம் விலை உயரக்கூடும் என சந்தை வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.



# சைபர் குற்றவாளிகளுக்கு 'வங்கி கணக்கு' கொடுத்த ஏஜெண்டுகள்: தமிழகம் முழுவதும் அதிரடி கைது!

சென்னை, ஆக. 08–

தற்போது நாடு முழுக்க சைபர் குற்றவாளிகளின் ஆதிக்கம்தான் பொது மக்களை ஆட்டிப்படைத்து வருகிறது. எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு, ஆன்லைன் மூலமாக சைபர் குற்றவாளிகள் நூதனமான முறையில் பொதுமக்களின் பணத்தை கொள்ளையடித்து வருகிறார்கள். 'டிஜிட்டல் கைது' என்ற பெயரில் பொதுமக்களிடம் சைபர் குற்றவாளிகள் கொள்ளை வேட்டையை நடத்தி வருகிறார்கள். இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்ட வெளிமாநிலங்களைச் சேர்ந்த 14 சைபர் குற்றவா ளிகளை, சென்னை சைபர் கிரைம் போலீசார் கைது செய்து, அழைத்து வந்து சமீபத்தில் சிறையில் அடைத்தார்கள்.



# ஜீஷான் சித்திக் எம்எல்ஏவுக்கு கொலை மிரட்டல்!

புதுடெல்லி, ஆக. 08–

பாபா சித்திக்கின் மகனும், எம்.எல்.ஏ.வுமான ஜீஷான் சித்திக்கை மிரட்டும் வகையில் இந்தி மொழியில் உள்ள அந்த ஆடியோவில் கூறப்பட்டு இருப்பதாவது:–

"உன்னுடைய தந்தையை நான்தான் கொன்றேன். இப்போது உனக்கான மரண வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு விட்டது. உன்னுடைய பாதுகாப்பை எவ்வளவு வேண்டுமானாலும் பலப்படுத்திக்கொள். கடந்த முறை நீ அதிர்ஷ்ட வசமாக தப்பிவிட்டாய், ஆனால் இந்த முறை எங்களிடம் இருந்து தப்பவே முடியாது." இவ்வாறு அந்த ஆடியோவில் மிரட்டல் விடுக்கப்பட்டு இருந்தது.



இந்த ஆடியோ குறித்து ஜீஷான் சித்திக்கின் சகோதரி பாந்திரா போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையில் இறங்கி உள்ளனர்.

மிரட்டல் விடுக்கப்பட்ட அந்த ஆடியோ பதிவின் உண்மைத்தன்மை என்ன? அது நிஜமாகவே தலைமறைவாக உள்ள குற்றவாளி ஜீஷான் அக்தர் பேசியதுதானா? மற்றும் அது எந்த ஐ.பி முகவரியிலிருந்து இணையதளத்தில் பதி வேற்றம் செய்யப்பட்டது? என்பது குறித்து சைபர் கிரைம் போலீசார் உதவியுடன் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.


இந்த கொலை மிரட்டல் சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டில் அரிசி விலை கிடுகிடு உயர்வு!

சென்னை, ஆக. 08–

தமிழகத்துக்கு நமது தஞ்சை பகுதி மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும் அதிக அளவில் அரிசி விற்பனைக்கு வரும். பொதுவாக தமிழகத்தில் தஞ்சையில் விளையும் மோட்டா ரக அரிசியை விட கர்நாடகாவில் இருந்து விற்பனைக்கு வரும் பொன்னி சன்னரக அரிசி தான் அதிகளவில் விற்பனையாகிறது.

அதேபோன்று, சென்னையை அடுத்த ரெட்ஹில்ஸ் பகுதியை சுற்றி இருக்கும் அரிசி ஆலைகளுக்கு ஆந்திர மாநிலத்தில் இருந்து அதிக அளவில் நெல் அரவைக்கு வரும். ஆனால், தற்போது கர்நாடகாவில் நெல் விளைச்சல் குறைந்துள்ள காரணத்தால், அம்மாநில வியாபாரிகள் ஆந்திரா மற்றும் தஞ்சாவூர் சென்று அரிசியை வாங்கிச் செல்கின்றனர். இதனால், அரிசி விலை 10 முதல் 25 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக பொன்னி சன்னரக அரிசி அதிகபட்சமாக 25 சதவீதமும், மோட்டா ரக அரிசி 10 சதவீதமும், பாசுமதி அரிசி 10 சதவீதமும் விலை அதிகரித்துள்ளது.



அதன்படி, ரூ.1,400–க்கு விற்பனை செய்யப்பட்ட 26 கிலோ பொன்னி சன்னரக அரிசி ரூ.1,700 ஆக அதிகரித்துள்ளது. ரூ.650–க்கு விற்பனை செய்யப்பட்ட 10 கிலோ பொன்னி சன்னரக அரிசி ரூ.800 ஆக விலை உயர்ந்துள்ளது. ரூ.350–க்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோ பொன்னி சன்னரக அரிசி ரூ.420 ஆகவும் அதிகரித்துள்ளது.

அதே போன்று கர்நாடகாவில் இருந்து விற்பனைக்கு வரும் ஸ்டீம் வகை (சிங்கிள் பாயில்) பொன்னி அரிசி 30 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது. அதன்படி, 26 கிலோ ராய்ச்சூர் பொன்னி அரிசி ரூ.1,250–ல் இருந்து ரூ.1,700 ஆக உயர்ந்துள்ளது. அதே போன்று, ரூ.2,200 முதல் ரூ.2,300 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த 30 கிலோ பாசுமதி அரிசி ரூ.2,800 முதல் ரூ.3,000 வரை விற்பனை செய்யப்படுகிறது. குறைந்தபட்சமாக ரூ.70–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ பாசுமதி அரிசி தற்போது ரூ.85 முதல் ரூ.90 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இந்த அரிசி விலை உயர்வு டிசம்பர் மாதத்திற்கு பிறகு குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

# EPFO அதிரடி! இனி PF பணம் எடுக்க செக் தேவையில்லை!



புதுடெல்லி, ஆக. 08–

பிஎஃப் பணம் எடுக்க விண்ணப்பிக்கும் போது Cancelled Cheque அல்லது வங்கி பாஸ்புக் நகலை பதிவேற்றும் நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

வங்கி கணக்கு விவரங்கள் ஏற்கனவே டிஜிட்டல் முறையில் சரிபார்க்கப்படுவதால், கூடுதல் ஆவணங்கள் தேவையில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த மாற்றத்தால் 7 கோடிக்கும் அதிகமான EPFO உறுப்பினர்கள் பயனடைவார்கள் என கூறப்பட்டுள்ளது. 202526 நிதியாண்டில் EPFO 8.3 கோடிக்கும் அதிகமான கிளைம்களை தீர்வு செய்துள்ளது. விரைவில் EPFO 3.0 மூலம் UPI, ATM வழியாக PF பணம் எடுக்கும் வசதியும் வர உள்ளது.

# பழனி நில மோசடி: வழக்கறிஞர் சிறையில் மரணம்!



அன்வர்தீன்

பழனி, ஆக. 08–

பழனி கோவில் அடிவாரத்தில் உள்ள தண்டபாணி சுவாமிகள் மட அறக்கட்டளைக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான நிலம், ரூ.2 கோடிக்கு தனிநபர்களுக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டதாக எழுந்த புகார் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுகுறித்து சிபிசிஐடி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் நிலத்தை விற்பனை செய்ததாகக் கூறப்படும் ஆசிரியர் முருகதாஸ், நிலத்தை வாங்கிய வெள்ளத்துரை (60), சேதுபதி (66) மற்றும் அவர்களுக்கு உதவியதாகக் கூறப்படும் பழனி கவுண்டன்குளம் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் அன்வர் தீன் (65) ஆகிய 4 பேரை சிபிசிஐடி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் அன்வர் தீனுக்கு நேற்று இரவு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

ரூ.100 கோடி மதிப்பிலான நில மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் சிறையில் உயிரிழந்த சம்பவம் பழனியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வெளியேற்றக் கூடாது! வருசநாடு மக்கள் போராட்டம்!







தேனி, ஆக. 08–

வருசநாடு, மேகமலை பகுதிகளில் தலைமுறை தலைமுறையாக வசித்து வரும் மக்களை மலைக்கிராமங்களில் இருந்து வெளியேற்றக் கூடாது என வலியுறுத்தி, நூற்றுக்கணக்கான மக்கள் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்மேகமலை புலிகள் காப்பகத்தை காரணம் காட்டி, விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகளில் இருந்து வெளியேற வனத்துறை அழுத்தம் கொடுப்பதாக அவர்கள் குற்றம்சாட்டினர். பாரம்பரியமாக சாகுபடி செய்யும் நிலங்களுக்கு வன உரிமைச் சட்டப்படி பட்டா வழங்க வேண்டும், சாலை, மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான தடையை நீக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். தொடர்ந்து, கோரிக்கைகள் அடங்கிய மனுவை மாவட்ட ஆட்சியர் வைத்திநாதனிடம் அளித்தனர். நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் போராட்டம் நடத்தப்படும் என போராட்டக்குழுவினர் எச்சரித்தனர்.

# வேலை வாய்ப்பு

## அமராவதி சைனிக் பள்ளியில் வேலை வாய்ப்பு...!

உடுமலைப்பேட்டை: மத்திய அரசின் கீழ் செயல்படும் அமராவதிநகர் சைனிக் பள்ளி (Sainik School Amaravathi–nagar) பல்வேறு பணியிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் மொத்தம் 8 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. PGT (கணிதம், ஆங்கிலம், இயற்பியல்), TGT (கணிதம்), இயற்பியல் ஆய்வக உதவியாளர், ஆலோசகர் (Counselor), இசைக்குழு பயிற்சியாளர் (Band Master), கலை ஆசிரியர் (Art Master) உள்ளிட்ட பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆன்லைன் விண்ணப்பம் கடந்த ஆகஸ்ட் 1, 2026 முதல் தொடங்கியுள்ளது. ஆகஸ்ட் 25, 2026–க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

நிறுவனம்: அமராவதிநகர் சைனிக் பள்ளி

பணி: PGT, TGT, ஆய்வக உதவியாளர், ஆலோசகர், Band Master, Art Master

காலிப்பணியிடங்கள்: 8

பணியிடம்: அமராவதிநகர்

பணி வகை: நிரந்தர / ஒப்பந்த

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்– https://www.sainikschoolamaravathinagar.edu.in/

கடைசி நாள்: 25.08.2026

கல்வித் தகுதி, வயது வரம்பு, சம்பளம் மற்றும் தேர்வு முறை உள்ளிட்ட முழு விவரங்களை அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அறிந்து விண்ணப்பிக்கலாம்.





# வாடகை டெபாசிட்: நீதிமன்றம் முக்கிய உத்தரவு!





புதுடெல்லி, ஆக. 08–

வாடகை வீட்டை காலி செய்யும் போது பெயிண்ட், சுத்தம், இயல்பான தேய்மானம் (Wear and Tear)போன்ற காரணங்களுக்காக டெபாசிட் தொகையை வீட்டு உரிமையாளர்கள் குறைக்கக் கூடாது என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

Transfer of Property Act, 1882–ன்படி, இயல்பான பயன்பாட்டால் ஏற்படும் தேய்மானத்திற்கு வாடகை தாரர் பொறுப்பல்ல. எனவே, வெள்ளை அடித்தல், பெயிண்ட் அடித்தல் போன்ற செலவுகளை வீட்டு உரிமையாளர்களே ஏற்க வேண்டும்.

ஆனால் கதவு, ஜன்னல், ஸ்விட்ச், பைப் உடைப்பு, சுவரில் பெரிய சேதம் போன்றவை வாடகைதாரரின் அலட்சியத்தால் ஏற்பட்டிருந்தால், டெபாசிட் தொகையில் இருந்து கழிக்கலாம். அதற்கும் செலவுக்கான பில் மற்றும் ஆதாரங்கள்கட்டாயம் வழங்க வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி கவலைக்கிடம்?



ஈரான், ஆக. 08–

ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும், அவசரமாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் இஸ்ரேல் ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி கமேனி மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக ஆட்சியின் உயர் மட்டங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருவதாகவும், அவரது மறைவு குறித்த செய்தி விரைவில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் இஸ்ரேல் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது கூட்டு ராணுவத் தாக்குதல்களை நடத்தியதில் ஈரான் உச்ச தலைவரான கமேனி கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து, அவரது மகனான மொஜ்தபா கமேனி சில நாள்களிலேயே உச்ச தலைவராகப் பதவியேற்றார். பதவியேற்ற நாள் முதல், அவர் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. எழுத்துப்பூர்வ அறிக்கைகளை மட்டுமே வெளியிட்டு வந்தார். அவரது தந்தையின் இறுதிச் சடங்கில் கூட அவர் கலந்துகொள்ளவில்லை எனக் கூறப்பட்டது.

கமேனி கொல்லப்பட்ட தாக்குதலில் மொஜ்தபா கமேனியும் காயமடைந்ததாகவும், அதனால் அவரது தோற்றத்தில் சிதைவு ஏற்பட்டிருக்கலாம் என்றும் முன்பே செய்திகள் வெளியாகின. அதனால், அவர் தலைமறைவாக இருப்பதாகவும் கூறப்பட்டது.

அவரது நிலை பற்றி வெளியான செய்திகளை உறுதிப்படுத்தும் விதமாக, மொஜ்தபா கமேனியை நேரடியாகத் தொடர்புகொள்வது கடினம் என ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் அரசுத் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

மொஜ்தபா கமேனியின் இருப்பிடம் மற்றும் செயல்பாடு தொடர்பாக சர்வதேச மற்றும் பிராந்திய அளவில் தொடர்ந்து கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. அவர் ஈரானில் இல்லை என்று ஐக்கிய அரபு அமீரக செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டிருந்தது.

அதேநேரம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனியார் செய்தி நிறுவன நேர்காணலில், ஈரானின் உயர்மட்ட ராணுவத் தலைமை அழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறினார். மேலும் குறிப்பிட்ட ராணுவ நடவடிக்கைக்குப் பிறகு கமேனி 90% செயலிழந்துவிட்டார் என்றும் டிரம்ப் குறிப்பிட்டார்.

மொஜ்தபா கமேனியின் உடல்நிலை பற்றிய ஊகங்கள் தொடர்ந்து பேசப்பட்ட நிலையிலும் ஈரான் அரசு அதிகாரிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தனர். அவருக்கு சாதாரண காயங்கள் ஏற்பட்டதாகவும், நாட்டின் ராணுவச் செயல்பாடுகளை அவர் மேற்பார்வையிட்டு வருவதாகவும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தொடர்ந்து கூறி வந்தனர்.

தற்போது இஸ்ரேல் செய்தி நிறுவனங்கள் கமேனி உடல்நிலை குறித்து செய்திகளை வெளியிட்டு வரும் நிலையில் அதன் நம்பகத்தன்மை குறித்து ஈரான் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், தலைமையில் நடைபெற்றது.

# கனடா காட்டுத்தீயால் வட அமெரிக்க நகரங்களில் மோசமான காற்றின் தரம்!

கனடா, ஆக. 08–

கனடாவில் தீவிரமடைந்து வரும் காட்டுத்தீ காரணமாக பல்வேறு வட அமெரிக்க நகரங்களில் காற்றின் தரம் மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. தற்போதைய



நிலவரப்படி, கனடாவில் 858 இடங்களில் காட்டுத்தீ எரிந்து வருவதாகவும், அதில் 111 இடங்களில் தீ இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்றும் அரசுத் தரவுகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக, அமெரிக்காவின் மத்திய மேற்கு மற்றும் வடகிழக்கு பகுதிகள் வரை அடர்ந்த நச்சுப் புகைமூட்டம் பரவியுள்ளது.

உலகின் மிக மோசமான காற்று மாசுபாடு கொண்ட முக்கிய நகரங்களின் பட்டியலில் அமெரிக்காவின் டெட்ராய்ட், சிகாகோ, நியூயார்க் மற்றும் மினியாபோலிஸ் ஆகிய நகரங்கள் முன்னணியில் உள்ளன.

சாதாரண காற்று மாசுபாட்டை விட இந்த காட்டுத்தீ புகை அதிக நச்சுத்தன்மை வாய்ந்தது என்று மருத்துவ ஆய்வுகள் எச்சரிக்கின்றன. இந்த நச்சுப் புகை வான்வெளியில் பல வாரங்களுக்கு நீடிக்கக்கூடும் என்பதால், பொதுமக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சூழலில், 'கனடா தனது காடுகளைச் சரியாகப் பராமரிக்காததே இந்த அவலநிலைக்குக் காரணம்' என்று அந்நாட்டு அரசை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடுமையாகச் சாடினார்.

மேலும், இச்சுற்றுச்சூழல் பாதிப்பைக் கையாள்வதற்காக அமெரிக்கவுக்கு ஏற்படும் இழப்பை, கனடா இறக்குமதிகளுக்கு விதிக்கப்படும் சுங்க வரியுடன் கூடுதலாகச் சேர்க்கப்போவதாகவும் அவர் எச்சரித்தார்.

# உணவுப் பிரியர்களுக்கு குட் நியூஸ்!



சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருப்பூர், சேலம் உள்ளிட்ட நகரங்களில், தேர்ந்தெடுத்த பகுதிகளில் சாலையோர உணவகங்கள் அமைக்கப்படுவதற்கான முன்னெடுப்புகள் துவங்கியுள்ளன.

இங்கு தரமான உணவு தயாரிக்கப்படுவதை உறுதி செய்து சான்றிதழ் பெற்ற உணவகங்கள், பாதுகாப்பாக உணவு தயாரிக்க பயிற்சி பெற்ற சமையல் கலைஞர்களால் உணவு தயாரிக்கப்பட்டு சுகாதாரமான முறையில் பரிமாறப்படுவது உறுதி செய்யப்படும் என்று தெரிகிறது.

தொழிலாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் காளான்கள் போல தள்ளுவண்டிக் கடைகளும், சாலையோர உணவகங்களும் திறக்கப்பட்டு சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரிக்கப்படுவதால் அதனை சாப்பிடும் மக்களுக்கும் பல்வேறு உடல் நலப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இவற்றைத் தவிர்க்க, சுகாதாரமான உணவு, சுத்தமான குடிநீர் சாப்பிடும் இடம் சுற்றிலும் மூடப்பட்டு, கழிவுகளை பத்திரமாக வெளியேற்றுவதற்கான வசதிகளுடன் புதிய சாலையோர உணவகங்கள் விரைவில் திறக்கப்படவிருக்கின்றன. இருசக்கர வாகன நிறுத்துமிடங்கள், சிசிடிவி பாதுகாப்பு என அனைத்தும் உருவாக்கப்படவிருக்கிறதாம்.

இதற்காக மத்திய சென்னையின் சில பகுதிகளும், சென்னையின் இதர பகுதிகளையும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு நடத்தி அதில் முக்கிய இடங்களை தேர்வு செய்யவிருக்கிறார்கள். அதுபோல, தேர்வு செய்யப்படும் சாலையோர உணவகங்களுக்கு தேவையான நிதியுதவி செய்யவும் சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. தற்போது, இதற்காகவே 100க்கும் மேற்பட்ட உணவகத்தினருக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறதாம். ஒருவேளை உங்கள் பகுதியிலும் இந்த சாலையோர உணவகங்கள் வரலாம். உணவுப் பிரியர்கள், சாலையோர உணவகங்களின் சுவையான உணவுக்கு அடிமையாகியிருப்பார்கள். ஆனால் அங்கு சாப்பிடுவதால் என்னென்ன பாதிப்பு வருமோ என்ற அச்சிலும் இருப்பார்கள். இனி அச்சமின்றி, சுவையான மற்றும் சுகாதாரமான உணவு கிடைக்கும் என்பது குட் நியூஸ்தானே?



மதுரை மாவட்டத்தில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற வராற்றுச் சிறப்புமிக்க பகுதிகளை உள்ளடக்கிய திருமலை நாயக்கர் அரண்மனை, சேதுபதி மருத்துவமனை(பாண்டியன் கூட்டுறவு அங்காடி), பத்துத்தூண் சந்து, விளக்குத்தூண், கொத்தவால் சாவடி, திருக்கோயில் தேர்கள், எழுகடல் வீதி, இராய கோபுரம், புதுமண்டபம், விட்டவாசல், நகரமண்டபம்(அச்சுராயன் மண்டபம்), மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் உள்ளிட்ட இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா பாரம்பரிய நடைபயணத்தில் பங்கேற்று வரலாற்றுச் சின்னங்களை சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளும் வகையில் உரிய தகவல் பலகைகள் மற்றும் அடையாளக் குறியீடுகள் அமைக்கவும் பாரம்பரிய சின்னங்களை முறையாக ஆவணப்படுத்தி பாதுகாக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் உடன் உள்ளார்.

## சினிமா துளிகள்..!

### பிக் பாஸ் 10-வது சீசன் ப்ரோமோ வெளியீடு!




விஜய் டிவியின் பிரபலமான பிக் பாஸ் நிகழ்ச்சி 10–வது சீசனில் அடியெடுத்து வைக்கிறது.

புதிய சீசனில் பங்கேற்கும் போட்டியாளர்கள் குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் அதிகரித்துள்ளது.

பொதுமக்களில் இருந்து போட்டியாளர்களை தேர்வு செய்யும் 'பிக் பாஸ் காமன் மேன்' நிகழ்ச்சியும் விரைவில் தொடங்க உள்ளது.

10 ஆண்டுகளை கொண்டாடும் வகையில் புதிய ப்ரோமோ வெளியிடப்பட்டுள்ளது. அதில் விஜய் சேதுபதி நடனமாடுவது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளதால், ப்ரோமோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

### சினிமா மினி நியூஸ்!

'ஓஜி 2' விரைவில்! பவன் கல்யாண் நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு ஏப்ரலில் தொடங்கும் என தகவல்.

துஷாராவுக்கு தோல் பிரச்னை! 'ஜி.டி.என்' படப்பிடிப்பில் கவரிங் நகைகளால் ஏற்பட்ட பாதிப்பால் படப்பிடிப்பு தாமதமானது.

ஆகஸ்ட் 14ல் 3 படங்கள்! சூர்யாவின் 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்', விஷாலின் 'மகுடம்', கவின்நயன்தாராவின் 'ஹாய்' வெளியாகின்றன.

தனுஷ்கரீனா ஜோடி? பி.எஸ்.மித்ரன் இயக்கும் வரலாற்றுப் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக கரீனா கபூர் நடிக்க பேச்சுவார்த்தை.

ரவி மோகன் இயக்குனர் அவதாரம்! 'ஆர்டினரி மேன்' மூலம் இயக்குனராக புதிய பயணத்தை தொடங்குகிறார்.

# மருத்துவமனையில் பூச்சி முருகன்... நலம் விசாரித்த ஸ்டாலின்!



சென்னை, ஆக. 08–

அப்போலோ மருத்து வமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் திமுக தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகனை கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் சந்தித்து நலம் விசாரித்தார். திமுக தலைமை நிலையச் செயலாளரும், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன், கடந்த மாதம் உடல்நலக்குறைவு காரணமாக மதுரை மாவட்ட மருத்துவம னையில் முதலுதவி சிகிச்சை பெற்றார். அதைத் தொடர்ந்து மேல்சி கிச்சைக்காக சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கடந்த ஒரு மாதகாலமாக சிகிச்சையில் உள்ள அவர் தற்போது உடல்நலம் தேறி வருகிறார்.



தேனி மாவட்டம், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து நீர்வளத்துறை சார்பில், கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளில் முதல்போக சாகுபடிக்காகவும், குடிநீர் தேவைக்காகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தண்ணீரை திறந்து வைத்தார்கள். உடன் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா, பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் உள்ளார்கள்.

# ராமேஸ்வரத்தில் ஒருநாள் வேலை நிறுத்தம்!

ராமேஸ்வரம், ஆக. 08–

ராமேஸ்வரத்தில் இருந்து 2 நாட்களுக்கு முன்பு ரமேஷ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகு ஒன்றில் 11 மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்று இருந்தனர். நடுக்கடலில் மீன்பிடித்தபோது படகு என்ஜின் பழுதாகியதால் கடல் அலை மற்றும் காற்றின் வேகத்தில் அந்த படகு இழுத்துச் செல்லப்பட்டு இலங்கை பகுதியில் கரை ஒதுங்கியது.

அந்த நேரத்தில் அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் பழுதான படகில் பரிதவித்த 11 மீனவர்களையும் சிறைபிடித்து கைது செய்து, நெடுந்தீவு கடற்படை முகாமுக்கு கொண்டு சென்று விசாரணை நடத்தினர்.

பின்னர் 11 பேரும் நேற்று நெடுந்தீவு போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். எல்லை தாண்டியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, ஊர்க்காவல்துறை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்கள். அப்போது, 11 மீனவர்களையும் வருகிற 21–ந்தேதி வரை சிறையில் அடைக்க நீதிபதி நளினி உத்தரவிட்டார். இதையடுத்து ராமேஸ்வரம்



மீனவர்கள் 11 பேரும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். படகு பழுதானதால் கைது நடவடிக்கையில் சிக்கிய 11 மீனவர்களும் மனிதாபிமான அடிப்படையில் படகுடன் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்த்த நிலையில் சிறையில் அடைக்க இலங்கை கோர்ட்டு உத்தரவிட்டது, அவர்களது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ராமேஸ்வரம் மீனவர்களை கவலை அடையச் செய்திருந்தது.

இந்நிலையில் 11 தமிழக மீனவர்களை இலங்கையில் சிறையில் அடைத்தற்கு எதிர்ப்பு தெரிவித்து ராமேஸ்வரத்தில் ஒருநாள் (சனிக்கிழமை) வேலை நிறுத்தம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரேஷன் கார்டு வைத்திருப்போர் கவனத்திற்கு!!



சென்னை, ஆக. 08–

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ரேசன் கடைகளிலும் இன்றும், நாளையும் இகேஒய்சி (eKYC) சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதா வது:– தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013–ன் படி முன்னுரிமை மற்றும் அந்தியோ தயா அன்ன யோஜனா குடும்ப அட்டைகளின் ஆதார் விவரங்களை சரிபார்ப்பதற்காக மின்னணு குடும்ப அட்டையில் இணைக்கப்பட்ட அனைத்து பயனாளிகளின் விரல் ரேகைஅடிப்படையிலான சரிபார்ப்பினை (eKYC) மேற்கொள்ள வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதும் இடையூறுமின்றி இப்பணியினை செய்திட அறிவுறுத்தப்பட்டு கடந்த அக்டோபர் 2023 முதல் குடும்ப உறுப்பினர்களின் விரல் ரேகை சரிபார்ப்பு (eKYC) பணி நடைபெற்று வருகிறது. தற்போதைய நிலவரப்படி, முன்னுரிமை குடும்ப அட்டைகளில் 95.86% eKYC பணியானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த eKYC பதிவினை 100% நிறைவு செய்யும் பொருட்டு 08.08.2026 (இன்று) மற்றும் 09.08.2026 (நாளை) ஆகிய நாட்களில் தமிழகத்திலுள்ள அனைத்து நியாய விலைக்கடைகளிலும் சிறப்பு முகாம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

ஆகவே, நியாயவிலைக்கடைகளில் கைரேகை பதிவு (eKYC) செய்யப்படாமல் விடுபட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கைரேகை விரல் (eKYC) பதிவு செய்ய வருகின்ற 08.08.2026 மற்றும் 09.08.2026 ஆகிய இரண்டு நாட்கள் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து நியாய விலைக்கடைகளிலும் நடைபெறும் சிறப்பு முகாமினை பயன்படுத்தி விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் eKYC பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இமாசல பிரதேசத்தில் தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்து - பலி 7



சிம்லா, ஆக. 08–

இமாசல பிரதேச மாநிலத்தில் உள்ள சம்பா மாவட்டத்தில் இன்று காலை 7.15 மணிக்கு, சாலையில் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று விபத்திற்குள்ளானது. இந்த விபத்தில், பேருந்தில் பயணம் செய்த 7 பேர் உயிரிழந்த நிலையில், 11 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கிய பேருந்து பைரகார் நகரில் இருந்து சம்பா நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த பேருந்து பைரகார்–டிஸ்சா சாலையில், ஆபத்தான 27 கி.மீ. மலைப்பாதை வழியாக சென்று கொண்டிருந்தபோது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் கவிழ்ந்துள்ளது. இதையடுத்து பயணிகளின் அலறல் சத்தம் கேட்டு, அங்கிருந்தவர்கள் ஓடிச்சென்று விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் மீட்புப்படை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தற்போது மருத்துவமனையில் 11 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அதில் 6 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விபத்திற்கான காரணம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020